ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2276/57 – 2022 අප්‍රේල් මස 22 වැනි සිකුරාදා – 2022.04.22
2276/57 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. BD/BD/LND/3/5/19/1370

ஒரு பொது தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், ரில்பொல கோரளையின் சிறு பிரிவில் பதுளை கிளேன்எல்பின் 80-எச், உடவெல 80-டி, வேவெஸ்ஸ 80-ஜே வேதிகுண ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. 170, மேலதிக 62, தாள் இல. 57 மற்றும் 2015.12.31 ஆந் திகதிய இறுதி கிராம வரைபடத்தின் துண்டு இல. 1371 இல் குறிப்பிடப்பட்டுள்ள 0.0019 ஹெக்டயார் விஸ்தீரணமான கீழுள்ள அட்டவணை - 01 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பதுளை செங்கலடி வீதி அபிவிருத்தி நடவடிக்கைக்காக காணி கையகப்படுத்தல் துண்டு இல. 1370, காணித் துண்டின் எல்லை

**அட்டவணை இல. 01**

| காணியின் பெயர் | பயன்பாடு | உரிமை கோருபவர் | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு | வேறு | விஸ்தீரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | பெருந்தெரு | உரிமை கோருபவரை அடையாளம் காண முடியவில்லை | துண்டு இல. $2^{W7}$ $2^{WB}$ | துண்டு இல. $2^{WB}$ மற்றும் 1374 | துண்டு இல. 1374, 1375 | துண்டு இல. 1371, 1369, 1368 மற்றும் 1366 | பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தி பணிக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தேவைப் படுகின்றது. | 0.0019 ஹெக்டயார் |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி. எம். எல். எச். திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2022, ஏப்பிறல் 20.

EOG 04 - 0125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.